## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2024 ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் தேதி 1 ம் பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.460/2019

பி.வா.சா.1 சாமியப்பன்

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில் :-**

சின்னபன்னாடி என்பவருக்கு 1 ம் பிரதிவாதி சாமியப்பன், 7 ம் பிரதிவாதி ரத்னாயாள், 8 ம் பிரதிவாதி பாவாத்தாள், 9 ம் பிரதிவாதி பொன்னம்மாள், 10 ம் பிரதிவாதி குழந்தாயாள், 11 ம் பிரதிவாதி ஜோதிமணி மற்றும் இறந்து போன பருவதம் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். 6 பெண்மக்களில் பருவதம் என்பவர் இறந்து விட்டார் என்றால் சரிதான். 2 ம் பிரதிவாதி மோகன்ராஜ் எனது மகன் ஆவார். 6 ம் பிரதிவாதி எனது மனைவி ஆவார். எனது மற்றொரு மகன் ஹரிஹரன் என்பவர் இறந்து விட்டார். மேற்படி ஹரிஹரனின் வாரிசுகள் 3 ம் பிரதிவாதி சுமதி, 4 ம் பிரதிவாதி இளவர் மதியரசன், 5 ம் பிரதிவாதி கதிர் அரசன் என்றால் சரிதான். இறந்த போன பருவதத்திற்கு அவரது கணவர் குருசாமியும், பூமதி என்ற ஒரே மகளும் வாரிசுதாரர்கள் என்றால் சரிதான். பருவதத்தின் கணவர் குருசாமி இறந்து விட்டார். பருவதத்தின் மகள் திருமணம் ஆன பிறகு இறந்து விட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கை இளவர் ஹர்சன் என்பவருக்காக அவரது தகப்பனார் கார்த்திகேயன் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருந்த போது மேற்படி கார்த்திகேயன் இறந்து விட்டார். தற்போது இந்த வழக்கை இளவர் ஹர்சனுக்காக அவரது தந்தை வழி பாட்டி வெங்கடேஷ்வரி என்பவர் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். கார்த்திகேயன், வெங்கடேஷ்வரி ஆகியோர்கள் கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல. கார்த்திகேயன் இறப்பிற்கு பிறகு வெங்கடேஷ்வரி தான் இளவர் வாதியை பாதுகாத்து பரமாரித்து வருகிறார் என்றால் சரிதான். வெங்கடேஷ்வரியை தவிர இளவர் வாதிக்கு சட்டப்படியான வாரிசுதாரர்கள் யாரும் இல்லை என்றால் சரியல்ல, பாட்டியும், அத்தைமார்களும் உள்ளார்கள். தாவா சொத்தானது சின்னப்பன்னாடிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான்தான் அந்த சொத்தை பாதுகாத்து வந்து என்னுடைய பெயருக்கு மாற்றி கடன் எல்லாம் கட்டி பெண் பிள்ளைகளுக்கு 10 பவுன் போட்டு திருமணம் செய்து கொடுத்தேன்.

தாவா சொத்தானது சின்னப்பன்னாடிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. சின்னப்பன்னாடிக்கு பூமதி என்ற ஒரே பெண் என்றால் சரியல்ல, கோமதி என்ற ஒரு பெண் இருந்து இறந்து விட்டார். பூமதியின் கணவர் பெயர் கார்த்திக்கேயன். பூமதி மற்றும் கார்த்திக்கேயனுக்கு இளவர் வாதி ஹர்சன் வாரிசு என்றால் சரிதான். தாவா சொத்து சின்னப்பன்னாடிக்கு பாத்தியப்பட்டு வாரிசு அடிப்படையில் எனக்கு பாத்தியம் என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து சின்னப்பன்னாடி எந்த விதமான எழுத்து மூல ஆவணங்கள் எதுவும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது எனக்கும், சின்னப்பன்னாடிக்கும் பாத்தியப்பட்ட கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரிதான். சின்னப்பன்னாடி காலத்தில் இருந்தே தாவா சொத்தை பொதுவாக தான் அனுபவித்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான்தான் அனுபவித்து வருகிறேன். தாவா சொத்தை நான் மட்டுமே அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. பருவதம் மற்றும் பருவதத்தின் கணவர் இறப்பிற்கு போனேனா என்றால் பருவதம் இறப்பிற்கு போனேன். பருவதம் கணவர் இறப்பிற்கு போகவில்லை. 2019 வருடம் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் எனக்கும், கார்த்திக்கேயன் என்பவருக்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. நானும், எனது தங்கைகள் 6 பேரும் சிறுவயது முதலே தாவா சொத்தில் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் மட்டும் தான் இருந்து வருகிறேன். தாவா சொத்தை பொருத்து கடந்த 23.09.2013 தேதியில் ஒரு ராஜமாணிக்கம் என்பவருக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் நான் கிரையம் கொடுக்கவில்லை என் மகன் கிரையம் கொடுத்தார். 13.12.2013 தேதியில் ராஜமாணிக்கம் என்பவர் 13ம் பிரதிவாதி பூங்கொடிக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 13.02.2019 தேதியில் பூங்கொடியிடம் இருந்து மீண்டும் நான் கிரையம் வாங்கிகொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து சின்னப்பன்னாடிக்கு விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் இல்லை என்றால் சரிதான். எனக்கும் கூட்டுக்குடும்ப சொத்தில் விவசாயத்தை தவிர வேறு தொழில்கள் இல்லை என்றால் சரிதான். சின்னப்பன்னாடியுடன் சேர்ந்து என்னுடைய வருமானத்தை கொண்டு தாவா சொத்தை கிரையம் வாங்கியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதியின் தாயார் மற்றும் வாதியின் பாட்டி ஆகியோர்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் சின்னப்பன்னாடி வாரிசுகள் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வந்தார்கள் என்றால் சரிதான். தாவா சொத்தை பொருத்து எனது சகோதரிகளுக்கும், இறந்து போன சகோதரியின் வாரிசுகளுக்கும் பாத்தியம் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து

என்னுடைய தனிப்பட்ட சொத்து அல்ல என்றும், கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல. என்னுடைய எதிர்வழக்குரையில் தாவா சொத்தை என்னுடைய சொந்த வருமானத்தில் இருந்து கிரையம் பெற்றதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு நான்தான் முழு உரிமையாளர் என்று விளம்புகை செய்ய கோரி எதிர் கோரிக்கை முன் வைக்கவில்லை என்றால் சரிதான். வாதியின் வழக்கானது வழக்குரையில் கோரியுள்ளபடி செலவு தொகையுடன் அனுமதிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**